*9*

# வார்த்தை மாம்சமானார்

## (யோவான் 1:1-18)

இப்போது துருக்கி என்று அழைக்கப்படும் நாட்டின் வடமேற்குப் பகுதியில் இருந்த நீசியா என்ற நகரில், கி.பி. 325ம் ஆண்டில், சபை நடத்துனர்கள் 318 பேர் கொண்ட குழு ஒன்று, இயேசுவின் மிகச்சரியான இயல்பு மற்றும் பிதாவாகிய தேவனுடன் அவருக்குள்ள உறவு ஆகியவற்றின் மீதான கருத்து வேறுபாடுகளைத் தீர்த்துக் கொள்வதற்காகக் கூடியது. அவர்கள், இயேசு தேவனால் உண்டாக்கப்பட்ட ஒரு படைப்புயிராக இருந்தார், அவருக்கு ஒரு தொடக்கம் இருந்தது மற்றும் அவர் மாற்றத்திற்கு உட்பட்டவராக இருந்தார் என்று கூறிய ஆரியுஸ் என்ற மனிதரின் போதனைக்குப் பதில் அளிப்பதற்காகக் கூடியிருந்தனர்.

நீசியாவின் இந்த ஆலோசனைக் குழுவானது நீசியாவின் உபதேச சட்டம் என்று அறியப்பட்டுள்ள பின்வரும் உபதேசக் கூற்றைப் பதிலாகக் கொடுத்தது:

> ஆளுகை யாவற்றின் பிதாவும், காணப்படுகிற மற்றும் காணப்படாத யாவற்றையும் படைத்தவருமான ஒரே தேவனை நாம் விசுவாசிக்கிறோம்;
>
> மற்றும், தேவனுடைய குமாரனும், பிதாவினால் பெறப்பட்டவரும் அவரால் பெறப்பட்ட ஒரே ஒருவருமான, அதாவது பிதாவின் சாராம்சத்தைக் கொண்டுள்ள, தேவனிலிருந்து வந்த தேவனும், ஒளியிலிருந்து வந்த ஒளியும், உண்மைத் தேவனில் இருந்து வந்த உண்மைத் தேவனும், படைக்கப் பட்டவராயிராமல் பெறப்பட்டவரும், பிதாவின் அதே சாராம்சத்தைக் கொண்டுள்ளவரும், பரலோகத்திலும் பூலோகத்திலும் உள்ள சகலத்தையும் படைக்கக் காரணமாக இருந்தவருமான கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நாம் விசுவாசிக்கிறோம்; நாம் மனிதர்களாகிய நமக்காகவும் நமது மீட்புக்காகவும் வானத்திலிருந்து இறங்கி வந்தார் மற்றும் மனிதராக அவதாரம் எடுத்தார். அவர் பாடுபட்டு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, பரலோகத்திற்கு எழுந்து சென்றார். மேலும் மரித்தோரையும் உயிருடன் இருப்போரையும் நியாயந்தீர்க்க அவர் வருவார் என்று விசுவாசிக்கிறோம்.
>
> மற்றும் பரிசுத்த ஆவியானவரை (நாம் விசுவாசிக்கிறோம்).
>
> ஆனால் ஒருகாலத்தில் அவர் இல்லாதிருந்தார் அல்லது அவர் தமது தலைமுறைக்கு முன்பு இருந்ததில்லை அல்லது அவர் ஒன்றுமில்லாது இருப்பதற்காக வந்தார் என்று கூறுகிறவர்களை அல்லது அவர் வேறுபட்ட *hypostasis* (சாராம்சம்) அல்லது *ousia* (இருப்பு) கொண்ட தேவனுடைய குமாரனாக இருக்கிறார் அல்லது அவர் ஒரு படைப்புயிராக அல்லது மாற்றப்படக் கூடியவராக அல்லது நிலையற்றவராக இருக்கிறார் என்று கூறுகிறவர்களை கத்தோலிக்க அப்போஸ்தலிக்க சபையானது சபிக்கப்பட்டவர்கள் என்று அறிவிக்கிறது.[1]

மனிதரால் உண்டாக்கப்பட்ட இந்த உபதேச சட்டமானது, இயேசு "பிதாவின் சாராம்சமாக," "உண்மைத் தேவனில் இருந்து வந்த உண்மைத் தேவனாக," "உண்டாக்கப்பட்டவரல்ல ஆனால் பெறப்பட்டவர்" என்று உரைக்கிறது. இதற்கு எதிரான கருத்துக்களைக் கொண்டிருந்த யாவர்மீதும், அந்தக் கூட்டத்தில் பங்கேற்றவர்கள், அலுவலகரீதியான "திருச்சபை சாபத்தை" உச்சரித்து, அதனால் தங்கள் நிலைப்பாட்டை மேலும் உறுதிப்படுத்தினர். நீசியா உபதேச சட்டமானது இயேசுவின் இயல்பு பற்றிய கேள்வியை முற்றிலும் தீர்த்து வைக்கவில்லை; விவாதங்கள் இன்றைய நாட்களில் போன்றே தொடர்ந்தன.

நீசியா உபதேச சட்டத்தை எழுதியவர்கள், இயேசுவைப் பற்றித் தங்கள் விசுவாசித்தது என்ன என்பதை விவரிக்க, வேதாகம அடிப்படையில்லாத *hypostasis* என்ற சொற்றொடரை (இது "சாராம்சம்" அல்லது "உண்மைநிலை" என்று அர்த்தப்படுகிறது) புகலிடமாகக் கொண்டனர் என்பது அந்த உபதேச சட்டத்தின் பிரச்சனையினுடைய ஒரு பகுதியாக உள்ளன.[2] இருப்பினும், இயேசுவின் இயல்பைப் பற்றிய மிகச்சிறந்த தெளிவுரை, மனிதரால் உண்டாக்கப்பட்ட எந்த உபதேசசட்டத்திலும் காணப்படுவதில்லை, ஆனால் யோவான் 1:1-18ல் இது காணப்படுகிறது. இது இயேசுவின் இயல்பைப் பற்றிய பிரச்சனையை நேரடியாக எடுத்துரைக்கிறது மற்றும் விசேஷமாக இது, "இயேசு தேவனாக இருந்தாரா அல்லது அவர் தேவனைப் போல மாத்திரம் இருந்தாரா?"; "அவர் தெய்வீகப் பண்புகள் சிலவற்றைக் கொண்ட ஒரு 'தெய்வீக மனிதராக,' பாதி தேவனாகவும் பாதி மனிதராகவும் இருந்தாரா?" என்ற மிகப் பழமையான கேள்விகளுக்குப் பதில் அளிக்கிறது. இவற்றிற்கு யோவான் 1:1-18 நமக்காகப் பதில் அளிக்கிறது, எனவே இயேசுவின் இயல்பு பற்றி இந்த வேதவசனப் பகுதி கூறுவது என்ன என்பதை நாம் கவனமாகக் கண்ணோக்குவோமாக.

## இயேசு முழுமையும் தேவனாக இருக்கிறார்

யோவான் சுவிசேஷத்தில் இயேசுவின் வரலாறு, மற்ற மூன்று சுவிசேஷங்களில் கூறப்பட்டதைக் காட்டிலும் மிகவும் பின்னான காலத்தில் இருந்து தொடங்குகிறது. மத்தேயு மற்றும் லூக்கா ஆகிய இருவரும் இயேசுவின் வரலாற்றை அவர் உற்பவித்தது மற்றும் அவரது பிறப்பு ஆகியவற்றில் இருந்து எடுத்துரைக்கையில், அவரது இளம் வயதில் இருந்து மாற்கு தொடங்குகிறார். இதற்கு நேர்மாறாக யோவான், நித்தியத்தை நோக்கி மிகவும் பின்னோக்கிச் செல்லுகிறார்: "ஆதியிலே வார்த்தை இருந்தது." இதனால்தான் நாம் கிறிஸ்துவின் "முன் இருப்பை" பற்றிப் பேச முடிகிறது - ஏனென்றால் "ஆதியில்" வார்த்தையானது ஏற்கனவே இருந்தது. "ஆதியிலே" என்ற வார்த்தை இயல்பாகவே நமது மனங்களை, ஆதியாகமம் 1ம் அதிகாரத்திற்கு எடுத்துச் செல்கிறது. உண்மையில் இந்தச் சொற்றொடர் யோவான் 1ல் என்ன அர்த்தப்படுகிறதோ அதே அர்த்தத்தையே ஆதியாகமம் 1லும் கொண்டுள்ளது: இயேசுவின் இருப்பின் "ஆதியில்" அல்ல ஆனால் வேறு எந்தப் பொருளும் இருக்கத் தொடங்கும் முன்னர் வார்த்தை இருந்தது.

இயேசுவை "வார்த்தை" என்று யோவான் அழைத்தது ஏன்? அதற்குப் பதில் அளிப்பதற்கு முன்னர், 14ம் வசனமானது அவர் (யோவான்) இயேசுவைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார் என்று காண்பிக்கிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும்: "அந்த வார்த்தை மாம்சமாகி ... நமக்குள்ளே வாசம்பண்ணினார்."

பின்பு அவர் இயேசுவின் வரலாற்றைக் கூறத் தொடர்ந்தார் - ஆனால் அவரை (இயேசுவை) அவர் (யோவான்), "வார்த்தை" என்று அழைத்தது ஏன்? புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களில், யோவான் ஒருவரே இயேசுவுக்கு இந்த புதுமையான இயற்பெயரைப் பயன்படுத்தியவராக இருந்தார் (வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தையும் யோவான் எழுதினார்; காண்க வெளிப்படுத்தின விசேஷம் 19:13). இதன் மூலம் எதை அர்த்தப்படுத்தினார்?

முதலாவது, "வார்த்தை" (*logos*) என்பது, தேவனுடைய சிந்தையின் வெளிப்பாட்டில் இயேசு இருக்கிறார் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. "வார்த்தை" என்பது பேசப்பட்டதாக அல்லது எழுதப்பட்டதாக, எவ்வாறு இருந்தாலும், அது தேவனுடைய சிந்தையில் உள்ளதை அவருடைய சித்தத்தை நமக்கு கொண்டு செல்லும் வழியாக இயேசு இருந்தார் என்று யோவான் கூறினார். எபிரெயர் 1:1, 2 ம் வசனப்பகுதி இதே விஷயத்தைக் கூறுகிறது: "பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்."

இரண்டாவது, இயேசுவை "வார்த்தை" என்று அழைத்தலானது, அவர் தேவனுடைய வல்லமையின் வெளிப்பாடாக இருக்கிறார் என்று கருத்துத் தெரிவிக்கிறது. ஏசாயா 55:8-11ன்படி, நமது வார்த்தைகளுக்கு இல்லாத ஒரு பண்பு தேவனுடைய வார்த்தைக்கு உள்ளது: அது எப்போதுமே செயல்விளைவு கொண்டுள்ளது மற்றும் அது எப்போதுமே தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுகிறது. தேவன் எதைக் கூறினாலும் அது நடக்கிறது. அதனால்தான் ஆதியாகமம் 1ம் அதிகாரமானது, படைப்பு பற்றிய செயல்முறையை "பின்பு தேவன் ... என்றார்" என்ற வார்த்தைகைளைக் கொண்டு திரும்பத் திரும்ப விவரிக்கிறது. தேவன் கூறியபடியே எல்லாம் ஆயிற்று. "கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும் ... உண்டாக்கப்பட்டது" (சங்கீதம் 33:6அ). இயேசுவின் நபர்த்துவத்தில், தேவன் தமது வல்லமையை - ஜீவனையும் வெளிச்சத்தையும் கொண்டுவருதலுக்கான அவரது வல்லமையையும் (வசனங்கள் 4, 5) பாவிகளை அவர் தமது பிள்ளைகளாக்கக் கூடிய அவரது வல்லமையையும் - மிகமேன்மையாக வெளிப்படுத்தினார்.

"அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது" என்று கூறியதன் மூலம் யோவான், குமாரானாகிய இயேசுவும் பிதாவாகிய தேவனும் ஒன்றேயான ஜீவிகள் அல்ல ஆனால் தனித்தனி நபர்த்துவம் கொண்டவர்கள் என்று சுட்டிக்காண்பித்தார். இது ஒரு முக்கியமான கருத்தாக உள்ளது: இயேசுவில் தேவன் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வேறுபட்ட வடிவத்தைக் கொண்டிருந்தார் என்று நாம் நினைத்து விடக்கூடாது. தேவன் ஒரே ஒரு நபராக நிலவுகிறார், அவர் சில வேளைகளில் குமாரன் என்ற வடிவத்தையும் பரிசுத்த ஆவியானவர் என்ற வடிவத்தையும் எடுத்துக்கொண்டார் என்று யூகித்தலானது "Modalism" என்று அழைக்கப்படுகிறது. இதைப் பரிந்துரைக்கும் "Modalists" எனப்படுபவர்கள், இந்த விளக்கமானது, ஒரே ஒரு தேவன் தாம் இருக்கிறார் என்ற வேதாகமக் கூற்றுகளுக்கு நியாயம் செய்கிறது மற்றும் "ஒருவரில் மூன்று நபர்கள்" பற்றிப் பேசும்போது ஏற்படும் குழப்பத்தைக் தவிர்க்கிறது என்று விவாதிக்கின்றனர். இருப்பினும் Modalism என்ற கொள்கையானது வேதாகமத்தில் உள்ள சில முக்கியமான புள்ளிவிபரத்தைக் காணாது விடுகிறது. உதாரணமாக, தேவன்

தமது குமாரனை இந்த உலகத்திற்கு “அனுப்பினார்” என்றும் அந்த இயேசு பிற்பாடு பரிசுத்த ஆவியைத் தமது சீஷர்களுடன் இருக்கும்படி “அனுப்பினார்” என்றும் நமக்குக் கூறப்படுகிறது (பல உதாரணங்களுக்கு இடையில், யோவான் 16:5-11ஐக் காணவும்). இந்த விளக்கங்கள், பிதா, குமாரன் மற்றும் ஆவியானவர் மூன்று நபர்களாக இருக்கின்றனர், இருப்பினும் ஒரே தேவன் இருக்கிறார் என்ற உண்மையைப் புறக்கணித்தலை சாத்தியமற்றதாக ஆக்குகின்றன.

அடுத்ததாக நாம், “... அந்த வார்த்தை தேவனாயிருந்தது” என்று வாசிக்கிறோம். பிதா தெய்வீகமானவராக இருப்பது போன்றே இயேசுவும் தெய்வீகமானவராக இருக்கிறார். ஒரே ஒரு தேவனே இருக்கிறார் என்று பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இரண்டும் அறிவிக்கும் அளவுக்கு இவர்கள் இருவரும் மிகநெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளனர். இந்தக் கருத்தைப் புரிந்து கொள்ளுதல் கடினமாக உள்ளது, மற்றும் இதுவே எல்லா கருத்து வேறுபாடுகளுக்கும் காரணமாக உள்ளது. இருப்பினும், யோவான் சுவிசேஷத்தின் பிற்பகுதியில், தாமே நிரூபணத்தைக் காணமுடிந்தால் அன்றி (இயேசுவின்) உயிர்த்தெழுதலை நம்பப் போவதில்லை என்று அறிவித்திருந்த தோமாவுக்கு இயேசு தரிசனம் தந்தபோது, இதே கருத்து பிரதிபலிக்கப்படுகிறது. இயேசு, ஆணிகள் துளைத்த தமது கரத்திலும் ஈட்டியால் ஊடுருவப்பட்ட தமது விலாவிலும் விரலைப் போடும்படி தோமாவை அழைத்த போது, அவர் “என் ஆண்டவரே! என் தேவனே!” என்று அறிக்கையிடுதலினால் பதில் அளித்தார் (யோவான் 20:28).

இயேசு தேவனாக இருக்கிறார் என்பது அண்டத்தின் படைப்பில் வார்த்தையின் பணிப்பொறுப்பு பற்றிய கூற்றுக்களினால் யோவான் 1ல் மேலும் விளக்கப்படுகிறது: “சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை” (வசனம் 3); “அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை” (வசனம் 10).

தேவன் ஒருவரே நித்தியத்தில் இருந்து நித்தியம் வரையிலும் இருக்கிறார். தேவன் ஒருவர் மாத்திரமே அண்டத்தைப் படைத்திருக்க முடியும். தேவன் ஒருவர் மாத்திரமே ஒளியையும் ஜீவனையும் கொடுக்கிறார். இந்தக் கூற்றுக்கள் யாவையும் வார்த்தையாகிய இயேசுவுக்கு உண்மையாக உள்ளன என்று யோவான் சுவிசேஷம் கூறுகிறது.

## இயேசு முழுமையும் மனிதராக இருந்தார்

யோவான் 1:14அ வசனப் பகுதியானது, இயேசு இந்த பூமிக்கு வந்தபோது அவர் ஒரு மனித வடிவை எடுத்தார் என்பதை இயன்ற வரையில் மூடி மறைக்காமல் விளக்குகிறது: “அந்த வார்த்தை மாம்சமாகி ... நமக்குள்ளே வாசம்பண்ணினார்.” யோவான், “வார்த்தை மனித இனமானார்” என்றோ அல்லது “வார்த்தை ஒரு மனிதரானார்” என்றோ கூறியிருக்க முடியும், ஆனால் அவர் இயேசுவின் பூமிக்குரிய பிரசன்னத்தின் மாம்சப் பிரகாரமான இயல்பை வலியுறுத்துவதைத் தேர்ந்து கொண்டார். இதைச் செய்ததில் யோவான், தமது நாட்களில் இயேசு உண்மையில் மனித வடிவை எடுக்கவில்லை, ஆனால் அவ்வாறு காணப்பட மாத்திரம் செய்தார் என்று உரிமை கோரிய மக்களின் முகத்தில் அறைவது போன்று பேசினார் என்று சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் "காணப்பட, அவ்வாறு இருப்பதாகத் தோன்றுகிற" என்று அர்த்தப்படும் *dokeo* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து பெறப்பட்ட "Docetists" என்று அழைக்கப்பட்டனர். மேலும் இந்த மக்கள், பருப்பொருள் தீயது மற்றும் ஆவி நல்லது என்றும் நம்பினர்; எனவே யோவான் தமது கருத்தை இயன்ற வரையிலும் வெளிப்படையாகத் தெரிவித்தார்: "வார்த்தை மாம்சமானார்." Docetists என்னப்பட்ட இவர்கள் யோவானின் இலக்குக் கூட்டமாக இருந்தார்களோ இல்லையோ, ஆனால் அவர் தமது கருத்தை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டார்.

வார்த்தை மாம்சம் "ஆனார்" என்ற கூற்று, மனிதத்தன்மை என்பது இயேசுவின் தோற்றக்கால அத்தியாவசிய இயல்பின் பாகமாக இருக்கவில்லை, ஆனால் பூமியில் அவர் இருந்தபோது அவரது நிலையாக இருந்தது என்பதைக் காண்பிக்கிறது. இது "நமக்குள்ளே வாசம்பண்ணினார்" என்ற வார்த்தைகளை யோவான் பயன்படுத்தியதில் மேலும் வலியுறுத்தப்படுகிறது. "வாசம்பண்ணினார்" என்பது "கூடாரமிட்டார்" அல்லது "தமது கூடாரத்தை ஊன்றினார்" என்று அர்த்தப்படுகிற கிரேக்க வார்த்தையில் இருந்து வருகிறது. கூடாரம் என்பது வழக்கமாக ஒரு நிரந்தரமான தங்குமிடமாக இருப்பதில்லை, ஆனால் அது பொதுவாக எடுத்துச் செல்லப்படக் கூடியதாகவும் தற்காலிகமானதாகவும் உள்ளது. அதுவே இயேசுவின் மாம்சப்பிரகாரமான இயல்பின் தன்மையாகவும் இருந்தது. அவர் சற்றுக்காலம் மாத்திரமே நம் மத்தியில் "தமது கூடாரத்தை ஊன்றி" இருந்தார். இதை நாம் "மாம்சம்" என்பதற்கான இலத்தீன் வார்த்தையிலிருந்து "அவதாரம்" (incarnation) என்று அழைக்கிறோம். நேரடி அர்த்தத்தில் இது இயேசுவின் "மாம்சவதாரமாக" இருந்தது. அது, மனித இருப்பின் பண்புகளாக உள்ள ஒவ்வொன்றையும் அனுபவிக்க இயேசு முற்றிலும் திறன் கொண்டிருந்தார் என்று அர்த்தப்படுகிறது. நம்மைப் போன்றே அவருக்குப் பசி ஏற்பட்டது, அவர் களைப்படைந்தார் மற்றும் அவருக்குத் தூக்கம் வந்தது. மாற்கு 14:33 வசனமானது, சிலுவையை நோக்கிச் செல்லும் நிலையில், அவர் "திகிலடையவும், மிகவும் வியாகுலப்படவும் தொடங்கினார்" என்று கூடச் சுட்டிக்காண்பிக்கிறது. (இந்தக் கருத்து ஆங்கில மொழிபெயர்ப்புகள் பலவற்றில் மறைக்கப்பட்டுள்ளது.) நமது மாம்சப்பிரகாரமான உடல்களுக்கு உண்மையாக உள்ள ஒவ்வொன்றும் அவருடைய மாம்சப்பிரகாரமான உடலுக்கும் உண்மையாக இருந்தது.

தெய்வீகமானவர் மாம்சமாக வரவேண்டியிருந்தது ஏன்? அதற்கு யோவான் 1:18ம் வசனம் தெளிவாகப் பதில் அளிக்கிறது: "தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்." "வெளிப்படுத்தினார்" என்பது *exegeomai* என்ற கிரேக்க வினைச் சொல்லில் இருந்து வருகிறது, இதிலிருந்தே நாம் "exegesis" என்ற நமது ஆங்கில வார்த்தையைப் பெறுகிறோம். "Exegesis" என்பது வேதாகம வசனப்பகுதி ஒன்றின் அர்த்தத்தை வெளிப்படுத்தி அதை மற்றவர்களுக்கு விளக்கியுரைக்கும் ஒரு விளக்கவுரையாளர் செய்யும் பணியாகும். இது, "வெளிப்படுத்த, விளக்கப்படுத்த" என்று அர்த்தப்படுகிறது. அதுவே இயேசுவின் வருகை நம் யாவருக்கும் செய்த விஷயமாக மிகச்சரியாக உள்ளது: நாம் வேறு எவ்வகையிலும் கற்று அறிந்திருக்க இயலாத தேவனுடைய சத்தியங்கள் சிலவற்றை நமக்குப் போதிப்பதற்காகவே வார்த்தை மாம்சமானார். வரையறைக்கு உட்பட்ட மனிதர்கள் என்ற வகையில் நாம், மாம்சத்தில் தேவனை "பார்த்தல்"

என்பதைத் தவிர வேறு எவ்வகையில், அவரது வரையறைக்கு உட்படாத மகிமையையும் வல்லமையையும் அன்பிரக்கத்தையும் புரிந்துகொள்ள முடியும்? 1 யோவான் 4:9, 10 வசனப்பகுதி, "தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது" என்று கூறுகிறது. தேவன் எப்போதுமே அன்பின் தேவனாகவே இருந்துள்ளார்; ஆனால் இயேசு வந்து சிலுவையில் மரித்த காலம் வரையிலும் அவரது மக்கள் அவரது அன்பின் ஆழத்தை அறிய இயலாதிருந்தது.

பிலிப்பு பிற்பாடு இயேசுவினிடத்தில், ஆண்டவரே, "பிதாவை எங்களுக்குக் காண்பியும் அது எங்களுக்குப் போதும்" என்று வேண்டிக் கேட்டுக்கொண்டபோது, இயேசு "பிலிப்புவே, இவ்வளவுகாலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்ன அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் ..." என்று பதில் அளித்தார் (யோவான் 14:8, 9). இயேசுவை பிலிப்பு போன்று நபராகக் காணுதல் அல்லது நாம் செய்வது போன்று வேதவசனங்களின் பக்கங்கள் மூலமாகக் காணுதல் என்ற இரண்டில் எதைச் செய்தாலும் அது, தேவனை வேறு எவ்வழியிலும் அறிய இயலாத சிலவற்றைக் காணுதலாக உள்ளது.

யோவான் 1:17ம் வசனம், "நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின" என்று கூறுகிறது. இதை நாம், இயேசுவின் வருகைக்கு முன்னர் கிருபையும் சத்தியமும் இல்லாதிருந்தன என்றோ அல்லது அவற்றைப் பற்றிய அறிவும் இல்லாதிருந்து என்றோ அர்த்தப்படுவதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. அது பழைய ஏற்பாட்டைத் தீவிரமாக உருச்சிதைப்பதாகவும் அதைத் தவறாகப் புரிந்துகொள்வதாகவும் இருக்கும். இயேசு வந்த காலத்திற்கு முன்னர் இயல்பாகவே கிருபை இருந்தது மற்றும் சத்தியமும் இருந்தது. இஸ்ரவேல் மக்களைத் தேவன் பொறுமையாகக் கையாண்டதைக் கண்ணோக்குதல் மாத்திரமேகூட, அவரது கிருபையின் இயல்பை நிலைநாட்டப்போதுமானதாக உள்ளது. "பத்துக் கட்டளைகள்" மற்றும் தீர்க்கதரிசிகளின் முன்னுரைத்தல்கள் போன்றவற்றின் மூலமாக, அவரது சத்தியம் அவரது வசனத்தில் எப்போதுமே விளக்கப்படுத்தப் பட்டுள்ளது. இயேசு வந்த காலம் வரையிலும் கிருபையும் சத்தியமும் இருக்கவில்லை (அல்லது விளக்கப்படுத்தப்படவில்லை) என்பது யோவானின் கருத்தாக இருக்கவில்லை, ஆனால் அவர் வந்த காலம் வரையிலும் அவைகள் (கிருபையும் சத்தியமும்) தங்களின் முழுமைத் தன்மையில் அறியப்படவில்லை என்பதே யோவானின் கருத்தாக இருந்தது. சங்கீதம் 103:8ம் வசனம், "கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்" என்று நமக்குக் கூறுகிறது, ஆனால் அவரது கிருபையும் சத்தியமும் இயேசுவின் நபர்த்துவம் மற்றும் வாழ்வு ஆகியவற்றில் அவதாரமாக்கப்படுவதற்கு முன்பு வரையில் மற்றும் சிலுவையில் அவரது மரணத்திற்கு முன்பு வரையில் இந்தக் கிருபை எவ்வளவு கிருபை நிறைந்தது என்பதை நாம் ஒருக்காலும் அறியாது இருந்தோம்.

யோவான் 1:1-18 வசனப் பகுதி, இயேசுவின் இயல்பைப் பற்றி தைரியமான

இரு கூற்றுக்களை ஏற்படுத்துகிறது: *அவர் இந்தப் பூமியில் இருக்கையில், அவர் முழுமையும் தேவனாக இருந்தார்*, மற்றும் *அவர் முழுமையும் மனிதராக இருந்தார்.*

## முக்கியமான இரண்டு கேள்விகள்

யோவானின் வார்த்தைகள், இயேசுவின் இயல்பைப் பற்றிக் குறிப்பிடப்பட வேண்டியவை குறித்து இரண்டு கேள்விகளை எழுப்புகின்றன. முதலாவது நாம், *"[இயேசு முழுமையும் தேவனாகவும் முழுமையும் மனிதராகவும் இருந்தார் என்ற] இந்தப் போதனையானது, வேதவசனங்களின் எஞ்சிய பகுதிகளுடன் சீர்பொருத்தமாக இருக்கிறதா?"* என்று கேட்கிறோம். அந்தக் கேள்விக்குப் பவுல் தாம் எழுதிய நிருபங்களில் மூன்றில் மிக உன்னதமான பதிலை அளித்தார். *பிலிப்பியர் 2:5-8ல் அவர் பின்வருமாறு எழுதினார்:*

> கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் *தேவனுடைய ரூபமாயிருந்தும்*, தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, *மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு*, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். (என்னால் வலியுறுத்தப்படுகிறது.)

சாய்வெழுத்துக்களில் உள்ள சொற்றொடர்கள், யோவான் சிந்தித்தது போன்றே பவுலும் சிந்தித்தார் என்று காண்பிக்கின்றன: இயேசு "தேவ சாயலாக" இருந்தார் ("வார்த்தை தேவனாக இருந்தது"), ஆனால் அவர் "மனிதத் தோற்றத்தை" மேற்கொண்டார் ("வார்த்தை மாம்சமானார்").

அது போன்றே, கொலோசெயர் *1:15-19*ல் பவுல் பின்வருமாறு கூறினார்:

> *அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும் துரைத்தனங்களானாலும் அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது. அவரே சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர். சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும், ... அவருக்குப் பிரியமாயிற்று.*

இது கொலொசெயர் *2:9*ல் மேலும் மறுவலியுட்டப்படுகிறது: "ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது." வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், தேவனுடைய இயல்பு குறித்து உண்மையாயிருப்பவைகள் யாவும் இயேசுவுக்கும் உண்மையாக

உள்ளன. மீண்டுமாக, தேவத்துவத்தின் "பரிபூரணமெல்லாம்" என்பது பற்றிப் பவுலின் குறிப்புகளுக்கும் யோவான் "வார்த்தை தேவனாக இருந்தார்" என்று கூறுவதற்கும் இடையில் இணைவு தெளிவாக உள்ளது. சிலர், இந்த வேதவசனப்பகுதியானது, ஆரியஸ் நான்காம் நூற்றாண்டில் பராமரித்த கருத்தை - அதாவது, உண்மையில் இயேசு முதல் படைப்புயிராக இருக்கும்படி தேவனால் படைக்கப்பட்டார் ("சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்") என்ற கருத்தை - மிகச்சரியாகப் போதிக்கிறது என்று கருத்துத் தெரிவித்துள்ளனர். இருப்பினும் அந்த விளக்கமானது இந்த சந்தர்ப்பப் பொருளில் எந்தக் கருத்தையும் ஏற்படுத்தாது. தேவனுடைய "பூரணத்துவமெல்லாம்" இயேசுவுக்குள் வாசம் பண்ணியது என்றால், பின்பு அவர் சாத்தியமான வகையில் ஒரு படைப்புயிராக இருந்திருக்க இயலாது. "முந்தின பேறுமானவர்" என்ற சொல்விளக்கம், வம்சவழி என்பதைக் காட்டிலும் முன்னுரிமை மற்றும் சிலாக்கியம் ஆகியவற்றை அதிகமாகக் குறிப்பதாக உள்ளது. பழைய ஏற்பாட்டில், முதற்பிறந்த மகனுக்கு அவரது தந்தையின் பரம்பரைச் சொத்தில் இருந்து இரண்டு மடங்கு பாகம் தரப்பட்டது, மற்றும் அவர் தந்தையின் இறப்பின் வேளையில் குடும்பத்தின் நடத்துவத்துவப் பொறுப்பை ஏற்கும்படியாக இருந்தது. சிலாக்கியத்திற்கு உரிய நிலைபற்றிய - இயேசு "முதலாவதாகப் படைக்கப்பட்டவரல்ல" என்ற - அந்தக் கருத்தையே பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்திருப்பார் என்பது உறுதி. இல்லையென்றால், அவர் கருத்து எதையும் தெளிவுபடுத்தாத எதையாவது எழுதியிருப்பார்.

பின்பு தீத்து 2:11-13 வசனப்பகுதி உள்ளது:

> ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகிகஇச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது.

இங்கு பவுல் இயேசுவை "தேவன்" என்று வெளிப்படையாகவே அழைத்தார் (இது யோவான் 1:1ல் உள்ளது போன்றே, *Theos* என்ற வார்த்தையாகவே உள்ளது). RSV மற்றும் NRSV வேதாகமங்களில் இவ்விடத்தில் உள்ள அடிக்குறிப்புகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்டபடி, இந்தச் சொல்விளக்கமானது, "மகா தேவனும் மற்றும் நமது இரட்சகருமாகிய" என்று சட்டப்பூர்வமாக மொழிபெயர்க்கப்பட முடியும், இது இயேசுவை "தேவன்" என்று அழைப்பதற்கு மாறாக, தேவனுக்கும் இயேசுவுக்கும் இடையில் ஒரு வித்தியாசத்தைக் கொண்டுவருகிறது. இருப்பினும் கிரேக்க வசனப்பகுதியில் இது மிகவும் இயல்பான வாசிப்பாக இருப்பதில்லை. ஒரு சில ஆங்கில மொழிபெயர்ப்புகள் இதை அவ்வாறு தரவழைக்கின்றன. இயேசுவை "தேவன்" என்று அழைப்பதில் பவுல் யோவானுடன் இணைந்திருந்தார் என்பது மிகவும் சாத்தியமானதாக உள்ளது.

மேலும், இயேசுவின் இயல்பு பற்றிய இந்தக் கண்ணோட்டத்தில், யோவானும்

பவுலும் மாத்திரம் தனித்திருக்கவில்லை. எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில் 1:3ம் வசனம், “இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும்தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், ...” என்று கூறுகிறது. “அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து” என்பது தேவனுடைய இயல்பின் மிகச்சரியான பிரதி வடிவம் என்று அர்த்தப்படுகிறது. ஒரு சில வசனங்களுக்குப் பின்பு எபிரெயருக்கு எழுதிய இந்த நிருபமானது சங்கீதம் 45:6, 7 மற்றும் பிற பழைய ஏற்பாட்டு வசனங்களைக் குமாரனுக்கு நடைமுறைப்படுத்தி, அவரை “தேவன்” என்று அழைக்கிறது (1:8). இந்த நிருபமானது அவரை, தேவனுக்குப் பழைய ஏற்பாட்டில் வழக்கமாகப் பயன்படுத்தப்படும் “கர்த்தர்” என்ற வார்த்தையைக் கொண்டும் அழைக்கிறது (காண்க 7:14). இயேசுவின் தெய்வீகத்துவம் மற்றும் மனித இயல்பு ஆகியவற்றைப் பற்றிய யோவானின் அறிவித்தல், புதிய ஏற்பாட்டின் எஞ்சிய பகுதிகளில் உள்ள வெளிப்படுத்தலுடன் முற்றிலும் சீர்பொருத்தமாக உள்ளன என்பது தெளிவாக உள்ளது.

*“பிதாவும் குமாரனும் ஒரே தேவனாக இருக்கின்றனர் என்று நாம் எப்படி விசுவாசிக்க முடியும்?”* என்பது யோவானின் உறுதிப்படுத்துதல்களிலினால் எழுப்பப்படும் இரண்டாவது கேள்வியாக உள்ளது. தர்க்கரீதியாக, இரு நபர்கள் ஒருவராக இருக்க முடியாது - எனவே, பிதாவாகிய தேவனும் குமாரனாகிய இயேசுவும் ஆகிய இருவருமே எப்படி தேவனாக இருக்க முடியும்? இந்தக் கேள்வியில், மூன்று நபர்கள் இருந்தும் ஒரே ஒரு தேவனையே நாம் கொண்டிருக்கும்படி, பரிசுத்த ஆவியானவரை நாம் சேர்த்துக்கொள்ளும்போது, சூழ்நிலை இன்னும் அதிக சிக்கலாகிறது. இது சட்டப்பூர்வமான அக்கறையாக உள்ளது, மற்றும், இதற்கு இரண்டு முக்கியமான பதில்கள் தரப்பட முடியும்.

1. நாம் புரிந்துகொள்ளாது இருப்பவற்றை விசுவாசித்தல் வேண்டும் என்பது முதல் பதிலாக உள்ளது. எல்லாக் காலத்திலும் நாம் யாவரும் இதைச் செய்கிறோம். உதாரணமாக, விமானங்கள் எவ்வாறு பறக்கின்றன என்பதை நான் ஒருகாலத்திலும் புரிந்து கொண்டிருப்பதில்லை. தூக்கப்படுதல் மற்றும் அழுத்தப்படுதல் பற்றிய எல்லா விளக்கங்களையும் நான் கேள்விப்பட்டு இருக்கிறேன், ஆனால் இன்னமும் நான் அதைப் புரிந்து கொள்வதில்லை. ஒரு 747 ஜெட்விமானத்தின் அளவையும் பருமனையும் அதில் பயணிக்கும் எல்லாப் பயணிகள், அதில் ஏற்றப்படும் சுமைகள் மற்றும் எரிபொருள் ஆகிய எல்லா எடைகளையும் கூட்டிக் காணும்போது, அது இன்னும் எனக்குச் சாத்தியமற்றதாக உள்ளது. இவையாவையும் இருந்தும்கூட, நான் அப்படிப்பட்ட விமானங்கள் ஒன்றில் பறந்திருக்கிறேன் எனவே அது வேலைசெய்கிறது என்று நான் நம்பி இணங்குகிறேன். அதுபோன்றே, யோவான் 3:16 நமக்குக் கூறுவது என்ன என்பதை நாம் விசுவாசிக்க மாத்திரம் வேண்டியுள்ளது: “தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.” இதையும் நான் புரிந்து கொள்வதில்லை. தேவன் தமது ஒரே பேறான குமாரனைக் கொடுக்குமளவுக்கு, பாவம் நிறைந்த மக்களை அவரால் எவ்வாறு அன்புகூர முடியும்? எல்லைக்கு உட்பட்ட மனிதனின் சிந்தைக்கு இது கருத்து எதையும் ஏற்படுத்துவது இல்லை - ஆனால் கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் இதை விசுவாசிக்கிறோம். பின்பு ஏன் நாம், நம்மால் புரிந்துகொள்ள

*இயலாத தேவனுடைய இயல்பின் சில விஷயங்களை ஏற்றுக்கொள்ளுதல் பற்றி இடர்பாடு அடைய வேண்டும்?*

*2. தேவனைப் பற்றியும் அவரது இயல்பைப் பற்றியும் நாம் புரிந்துகொள்ளாது இருக்கும் சில விஷயங்களை ஏற்றுக்கொள்ளுதல் என்பது இரண்டாவது பதிலாக உள்ளது. இது நம்மைத் திகைக்க வைக்கக் கூடாது. நாம் தேவனை முற்றிலுமாகப் புரிந்து கொண்டிருந்தால், அவர் எந்த வகையில் தேவனாக இருப்பார்? உண்மையில் தேவனைப் பற்றி நாம் புரிந்துகொள்ளாத விஷயங்கள் பல உள்ளன. அவர் ஒன்றுமில்லாமையில் இருந்து எவ்வாறு உலகத்தை உண்டாக்கினார்? அவரது வார்த்தையானது, அவர் "பேசிய" உடன் பொருட்கள் படைக்கப்படுமளவுக்கு அவ்வளவு வல்லமை கொண்டிருந்தது எப்படி? பூமியில் பலகோடிக்கணக்கான மக்கள் இருக்கையில், நம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் நடக்கும் விஷயங்கள் என்ன என்பதை அவர் எவ்வாறு அறிகிறார்? நமது தலையில் உள்ள முடிகள் யாவும் எண்ணப்பட்டிருக்கும் அளவுக்குத் தேவன் நம்மைப் பற்றி அறிந்திருக்கிறார் என்று இயேசு கூறினார். ஒருவேளை பின்வரும் கருத்து எல்லாவற்றிலும் மாபெரும் அற்புதமாக இருக்கலாம்: அவர் ஏன் நம்மைக் குறித்துக் கவலைப்படுகிறார்? பாவிகள் நிறைந்த, அவரைப் பற்றி அக்கறை இல்லாத பலர் நிறைந்த ஒரு உலகத்திற்காக அவர் தமது குமாரனை எவ்வாறு பலியாக ஒப்புக்கொடுக்க முடியும்? பின்வருவதை நாம் அறிக்கை இடுவோமாக: நாம் தேவனைப் பற்றிய பலவிஷயங்களை அறிவதில்லை.*

## *முடிவுரை*

*இயேசு தேவனாக இருக்கிறாரா? ஆம், அவர் ஒரு மனிதராக இருந்தாரா? ஆம். நாம் அதைப் புரிந்துகொள்கிறோமா? இல்லை, ஆனால் அப்படியிருந்தபோதிலும் நாம் அதை விசுவாசிக்க முடியும். நமது ஆத்துமாக்கள் அதைச் சார்ந்துள்ளன! "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது" (யோவான் 1:1); "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்" (யோவான் 1:12).*

---

*குறிப்புகள்*

[1]John H. Leith, *Creeds of the Churches* (Atlanta: John Knox, 1973), 30-31. [2]*வேதாகமக் கருத்துக்களை விளக்கப்படுத்த முயற்சிப்பதற்கு வேதாகமரீதியல்லாத மொழிநடையைப் புகலிடமாகக் கொள்ளுதல் என்பது உபதேச சட்டங்களின் தனித்தன்மையாக உள்ளது (இல்லை என்றால், உபதேச சட்டமானது வேதவசனத்தைக் திரும்பக் கூறுவதாகவே இருக்கும்). முந்திய உபதேச சட்டங்களை விளக்கப்படுத்த அல்லது திருத்த ஏற்பட்ட பிந்திய உபதேச சட்டங்கள் அதிகமான விவாதத்திற்கும் கலந்துரையாடலுக்கும் உட்படுத்தப்பட்டதற்கு இதுவே மிகச்சரியான காரணமாக உள்ளது.*

---

## *டொசீட்டிஸ்டுகள் & நாஸ்டிக்குகள்*

*"டொசீட்டிஸ்டுகள்" என்று அறியப்பட்ட குழுவானது, "நாஸ்டிசிஸம்"*

(“அறிவு” என்று அர்த்தப்படுகிற *gnosis* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து இது வந்துள்ளது) என்று அறியப்பட்டுள்ள கடவுள் மறுப்பு நம்பிக்கையின் ஒரு பிரிவினைக் குழுவாக இருந்தனர். நாஸ்டிசிஸம் என்பது கிறிஸ்தவத்தின் மீது கிரேக்க தத்துவத்தின் செல்வாக்கினுடைய விளைவாக இருந்தது, மற்றும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வாக்கில் இது கிறிஸ்தவ விசுவாசத்திற்கு முற்றிலும் இடர்ப்பாடு விளைவிக்கும் எதிராளியாக ஆனது.

பருப்பொருள் தீயது, ஆவி நல்லது என்ற நம்பிக்கையிலான ஒருவகையான தத்துவார்த்த இரட்டியமே நாஸ்டிக் நம்பிக்கையாக இருந்தது. நாஸ்டிஸம் பற்றி அதிகமாக வேறு எதையும் அறியாமலேயே, உலகம் தெய்வீகத்தால் படைக்கப்பட்டது (ஒரு “நல்ல தேவன்” பொல்லாதவற்றைப் படைப்பாரா?) மற்றும் இயேசுவின் திரு அவதாரம் (தேவன் எவ்வாறு பொல்லாத உலகப்பிரகாரமான உடலுக்குள் வாசம் செய்ய முடிந்தது?) என்பது போன்ற கிறிஸ்தவ நம்பிக்கைகளில் இடர்பாடு கொண்டிருந்தனர் என்பதை நாம் தெளிவாகக் காணமுடியும். இந்த இயக்கம் முன்னேற்றம் அடைகையில், இது சபையுடன் கூர்ந்த முரண்பாடு கொண்டதாக வந்தது.

யோவான் 1ல் அவர், சிலர் நம்புகிறபடி உண்மையிலேயே “நாஸ்டிக்குக்கு எதிராக” எழுதினாரா இல்லையா என்பது கேள்விக்குரியதாக உள்ளது, ஏனெனில் இரண்டாம் நூற்றாண்டின் காலகட்டத்திற்கு முன்பு வரையிலும் நாஸ்டிக்குகளின் இயக்கம் முழுமையான செல்வாக்குக் கொண்டிருந்ததில்லை. இருப்பினும் நாஸ்டிக கண்ணோக்குகளை நோக்கிய விருப்பநோக்கங்கள் இன்னும் முற்பட்ட காலத்திலேயே எழும்பின, மற்றும் யோவான் அவற்றில் சிலவற்றிற்குப் பதில் செயல் அளித்தார் என்பது சாத்தியமற்றதாக இருப்பதில்லை. மேலும் யோவான், “வெளிச்சம்” மற்றும் “ஜீவன்” போன்ற நாஸ்டிக்குகளின் பிரியமான சொற்றொடர்களை அடிக்கடி பயன்படுத்தினார். அப்படி என்றால் யோவான் நாஸ்டிஸத்திற்குப் பதில்செயல் செய்தாரா அல்லது ஒருவேளை நாஸ்டிக்குகள் தங்களின் சொல்லாக்கத்தை யோவானிடமிருந்து கடனாகப் பெற்றிருந்தார்களா?

நாஸ்டிக்குகளின் கண்ணோக்கங்களுக்கு எதிராக இயக்கப்பட்டதாக உள்ளதென்று திட்டவட்டமாகக் காணப்படும் ஒரு உதாரணம் 1 யோவான் நிருபமாகும்.

---

## நான்கு சுவிசேஷங்கள் ஏன்?

மத்தேயு, மாற்கு, லுக்கா மற்றும் யோவான் (“சுவிசேஷங்கள்”) யாவும் இயேசுவின் வரலாற்றைக் கூறுகின்றன என்பதால், இயேசுவைப் பற்றிய முற்றிலுமான ஒரே ஒரு வரலாற்றைக் கொண்டிருப்பதற்கு மாறாகப் புதிய ஏற்பாடு நான்கு சுவிசேஷங்களை உள்ளடக்கி இருப்பது ஏன்? கிறிஸ்தவம் தொடங்கிய பின் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இருந்தே கிறிஸ்தவர்களின் சிந்தைகளில் இந்தக் கேள்வி இடம் பெற்றுள்ளது.

முதலாவதாக, ஒவ்வொரு சுவிசேஷ எழுத்தாளரும், தாம் என்ன எழுதினார் என்பதை மிக உயர்வாகத் தேர்வு செய்து, தமது கருத்தை வலியுறுத்த அவசியமான தகவல் துணுக்குகளை மாத்திரம் உள்ளடக்கி, தாம் விரும்பிய விசேஷித்த வலியுறுத்தத்தைக் கொடுத்தனர் என்பதை நாம் நினைவில் வைக்க

*வேண்டும் (யோவான் 20:30, 31). இவர்களில் எவரும், எல்லாவற்றையும் கூறுவதில்லை, மற்றும் இந்த நான்குபேரும் சேர்ந்தும்கூட இயேசுவைப் பற்றி நமக்குத் தரும் தகவல்களில் இடைவெளிகளை விட்டுள்ளனர்.*

*இரண்டாவதாக, இந்த நான்குபேரும் வரலாற்றுக் கருத்து நோக்கில் மதிப்புக் கொண்டுள்ளனர். தொடக்ககால சபையானது, புதிய ஏற்பாட்டு மார்க்க சட்டத்தை (தேவனுடைய ஏவுதல் பெற்ற வார்த்தை என்று ஏற்றுக்கொள்ளப்படும் புத்தகப் பட்டியலை) மேம்படுத்துவதில், அப்போஸ்தலர்களின் அதிகாரத்துவம் பின்புலமாக இருந்ததென்று அவர்கள் கருதிய புத்தகங்களை உள்ளடக்கினர். மத்தேயு மற்றும் யோவான் ஆகியோர் அப்போஸ்தலர்களாக இருந்ததாலும், மாற்குவும் லூக்காவும் அப்போஸ்தலர்களின் நெருங்கிய கூட்டாளிகளாக இருந்ததாலும், அவர்கள் எழுத்தாங்கங்கள் தேவனுடைய அதிகாரத்துவமுள்ள வசனமாக இருப்பதாக கேள்வியின்றி முற்றிலுமாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. அவற்றின் அதிகாரத்துவத்தை அங்கீகரித்த கிறிஸ்தவர்கள் அவற்றை வேத வாக்கியங்களாக ஏற்றுக்கொண்டனர்.*

*மூன்றாவதாக, நாம் ஒரே ஒரு சுவிசேஷத்தை மாத்திரம் கொண்டிருந்தால், இயேசுவைப் பற்றிய நமது புரிந்து கொள்ளுதல் எவ்வளவு வறியதாக இருந்திருக்கும் என்பதை நாம் காண முடியும்! நான்கு சுவிசேஷ விபரங்களும் அடிக்கடி இயேசுவைப் பற்றிய நான்கு சித்தரிப்புகளாக ஒப்பிடப்பட்டுள்ளன. இவற்றில் எதுவும் அவரைப் பற்றிய எல்லாவற்றையும் நமக்குக் கூறுவதில்லை, ஆனால் இவை ஒவ்வொன்றும் அவரது இயல்பு மற்றும் அடையாளத்துவம் ஆகியவற்றின் குறிப்பிட்ட அம்சங்களை வலியுறுத்துகிறது. உதாரணமாக, மத்தேயு சுவிசேஷம் இயேசுவின் அரசத்துவத்தை வலியுறுத்துகிறது. மாற்கு சுவிசேஷம் அவரது மாபெரும் வல்லமை மற்றும் அதிகாரத்துவம் ஆகியற்றின் மீது அதிகமாக கவனம் குவிக்கிறது. லூக்கா சுவிசேஷம் இயேசுவை மனிதகுலம் முழுமைக்கும் நற்செய்தியாக இருக்கும்படி வந்தவர் என்று காண்பிக்கிறது. யோவான் சுவிசேஷம் இயேசுவை தேவனுடைய குமாரனாக, தேவன் தமது சித்தத்தை மாத்திரமல்ல ஆனால் தமது இயல்பையே நமக்கு வெளிப்படுத்த பயன்படுத்திய வார்த்தையாக இயேசுவை முன்னிறுத்துகிறது.*

*தனித்தனி சுவிசேஷங்களை நாம் எவ்வளவு அதிகமாக வாசிக்கிறோமோ அவ்வளவுக்கு நாம், ஒவ்வொரு எழுத்தாளரின் தனித்தன்மை வாய்ந்த கருத்துநோக்கைப் பாராட்ட வருகிறோம் மற்றும் நாம் ஒரே ஒரு சுவிசேஷத்தைக் கொண்டிராமல் நான்கு சுவிசேஷ விபரங்களைக் கொண்டிருப்பதற்காக அதிகம் நன்றி நிறைந்தவர்களாக இருக்க வேண்டும்.*